DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.**

CC. / STC. / MC./ DVC. No : **DVC. 08/2022**

Miscellaneous : -

Deposition of **PW – 1 Witness for Petitioner (Cross)**

Name : **திருமதி.சர்மிளா**
Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **16.02.2023.**

**சாட்சி முன்னிலை. சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**எதிர்மனுதாரர்கள் தப்பில் குறுக்குவிசாரணை**

துவக்க நேரம் 01.00

1) எனக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் என்று, எப்பொழுது, எந்த இடத்தில் திருமணம் நடந்தது என்றால் சின்னதிருப்பதியில், கடந்த 01.11.2019 அன்று திருமணம் நடைபெற்றது. திருமண பத்திரிக்கையை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் ஆமாம்.

2) இந்த திருமணப்பத்திரிக்கை(ம.த.சா.ஆ.1) வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. திருமணத்தின்பொழுது, 17 பவுன் நகைகள் எனக்கும், எதிர்மனுதாரருக்கு ½ பவுனும் போட்டதாக நான் சாட்சியம் அளித்துள்ள நிலையில் இந்த நகைகளுக்கான இரசீதுகளை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், எனது அப்பா விவசாய கூலி வேலை செய்துவருகிறார், அவர் அவ்வப்பொழுது சிறுக சிறுக சேமித்து வைத்த நகைகள்.

3) திருமணத்தின்பொழுது, 1 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்களை எனது பெற்றோர் வாங்கிக்கொடுத்ததாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல, என் பெற்றோர் வாங்கிக்கொடுத்தார்கள்.

4) திருமணத்தின்பொழுது, எனது தந்தை, எதிர்மனுதாரரின் அப்பாவிடம் சென்று திருமணத்திற்கு ரூ.1 இலட்சம் கடன் வாங்கிக்கொடுக்குமாறு கேட்டு, அவர் வாங்கிக்கொடுத்த பணத்தில்தான் திருமணத்தை என் அப்பா நடத்திவைத்தார் என்றால் சரியல்ல, என் அப்பா, திருமணத்தின்பொழுது ரூ.1 இலட்சத்தை கடன் வாங்கியதாக எதிர்மனுதாரர் தரப்பில் சொல்வது பொய்.

5) திருமணம் முடிந்து முதலிரவு எங்கு நடைபெற்றது என்றால் எங்கள் வீட்டில்தான் நடைபெற்றது. முதலிரவு எங்கள் வீட்டில் நடைபெற்றதாக நான் பொய் சொல்கிறேன் என்றாலும், 1 ம் எதிர்மனுதாரரின் வீட்டில்தான் நடைபெற்றது என்றாலும், வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6) எனது முதலிரவு 1 ம் எதிர்மனுதாரர் வீட்டில் நடந்தது என்றாலும், 1 வாரம் கழித்துதான் எனது அப்பா வந்து, என்னை எனது வீட்டிற்கு அழைத்து வந்தார் என்றாலும் சரியல்ல.

7) 1 ம் எதிர்மனுதாரரின் பெற்றோர், என்னை வீட்டின் சாமி அறைக்குள் அனுமதிக்கவில்லை என்றும், வெளியே வைத்து சாப்பாடு போட்டதாகவும் நான் எனது சாட்சியத்தில் சொல்லியது முற்றிலும் வழக்கிற்காக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, நான் கோழி கறி சாப்பிட்டுவிட்டேன் என்று, வீட்டிற்குள் வரக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள்.

8) எதிர்மனுதாரர்களுக்கு இரண்டு வீடுகள் உள்ளன என்றால் சரிதான். ரோட்டின் அருகில் உள்ள வீட்டில்தான் நானும், எனது கணவரும் குடும்பம் நடத்தினோம் என்றால் சரிதான்.

9) எனக்கு, 1 ம் எதிர்மனுதாரர் கோழி, ஆடு போன்ற கறிகளை வாங்கிவந்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக இவ்வாறு பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிர்மனுதாரர்களின் வழக்கறிஞரின் வேண்டுகோளிற்கு கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

முடிவு நேரம் 01.15

ஒம்/-S.முனுசாமி,
நீதித்துறை நடுவர் எண்.1,
ஆத்தூர்.